**செம்பாக்கம் நகராட்சியில் 31.3.2020ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் மார்ச் 2020 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.630** **பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சி மீது தொடரப்படும் வழக்குகள் தொடர்பாக இந்நகராட்சி சார்பில் ஆஜராகுகும மாவட்ட கோர்ட் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கு வழங்க வேண்டிய வழக்கு கட்டணம் 2020-21ம் ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.3,00,000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.631** **அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான இன்னோவா வாகனம் எண். TN 11 D 2013ல் குளிர்சாதன அமைப்பு பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்யம் பணி மற்றும் காலமுறை பராமரிப்பு பணி ஆகிய பணிகளை தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட லான்சன் மோட்டார்ஸ் பிரைவேட் லிட், பள்ளிக்கரணை நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி செய்து முடிக்கவும் அதற்கான தோரய மதிப்பீட்டு தொகை ரூ.57000/–க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.632** **பின்னேற்பு அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்.4

ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தாம்பரம், பல்லவபுரம், செம்பாக்கம் மற்றும் பம்மல் நகராட்சிகளில் தினசரி சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை வேங்கடமங்கலம் உரக்கிடங்கில் குப்பைகளை (மக்காத குப்பை) கொண்டு சேர்க்கப்பட்டமைக்கு, மின்சார இணைப்பிற்காக செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணம் பங்களிப்பு தொகை ரூ.395353/– (9.8%) செலுத்த கோரி வரப்பெற்ற ஆணையாளர், பல்லவபுரம் நகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.5527/2008/இ1 நாள் 28.2.2020ல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சியின் பங்களிப்பு தொகையினை ஆணையாளர், பல்லவபுரம் நகராட்சிக்கு இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.633 அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்.5

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி பகுதியில் உள்ள 16585 வீடுகள் 927 கடைகள் மற்றும் காலி மனைகள், புதியதாக கட்டுமானங்கள் மேற்கொள்ளும் இடங்கள், நாள்பட்ட மக்கள் பயன்பாடில்லா கட்டிடங்கள், நாள்பட்ட பூட்டிய குடியிருப்புகள், கோயில்கள், மசூதிகள், சர்ச், பார்க்குகள் மற்றும் இதர அரசு மற்றும் அரசு சாரா கட்டிடங்கள், கல்விக்கூடங்கள் இன்னபிற இடங்களில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகி டெங்கு, சிக்கன் குன்யா, மலேரியா, யானைக்கால் போன்ற பூச்சிகள் மூலம் பரவும் வியாதிகளை தடுக்கும் விதமாக DBCக்களை கொண்டு பணி மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜெ1 நாள் 17.9.2018ன் படி, மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுடன் 10 பேர் Rapid Response Team (RRT) டெங்கு தடுப்பு நடவடிக்கை (டெங்கு காய்ச்சல் கண்ட பகுதிகளில்) விரைவு செயலாக்க குழுவிற்கு 10 பேர் சேர்த்து 65 DBCக்களை (Outsourcing) நியமித்து கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் மெஸ்ஸர்ஸ் எஸ்.பி. அன்டு கோ நிறுவனம் மூலம் முதற்கட்டமாக மூன்று மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்திக் கொள்ள உத்திரவு வழங்கப்பட்டு அதன் பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 14.4.2020ம் தேதியுடன் முடிவடைவதாலும், கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாலும், இப்பணியாளர்களை கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திடவும், புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி தொடர்ந்து செயல்படுத்த காலதாமதம் ஏற்படும் வகையில், அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் 90 நாட்களுக்கு (15.4.2020 முதல் 14.7.2020 வரை) கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான மூன்று மாத செலவினத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் மற்றும் ஒப்பந்ததாரர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.634** **அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சியில் 2020–21ம் நிதியாண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக 19.3.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 7 வரை உள்ள சாலைகளில் குடிநீர் பைப்லைன் உடைப்பு மற்றும் கைபம்பு பழுது நீக்கம் செய்தல் பணி | 9.80 | எஸ்விபி எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ராஜலட்சுமி கான்ட்ராக்ட்ஸ் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 2 | வார்டு எண்.8 முதல் 15 வரை உள்ள சாலைகளில் குடிநீர் பைப்லைன் உடைப்பு மற்றும் கைபம்பு பழுது நீக்கம் செய்தல் பணி | 9.80 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ஜெ. தெய்வகனி | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 3 | வார்டு எண்.1 முதல் 7 வரை உள்ள மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்ற மோட்டார் இயக்குதல், குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்கி சீரான குடிநீர் விநியோகம் செய்ய தேவையான பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | 9.80 | ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை | |
| 4 | வார்டு எண்.8 முதல் 15 வரை உள்ள மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்ற மோட்டார் இயக்குதல், குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்கி சீரான குடிநீர் விநியோகம் செய்ய தேவையான பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | 9.80 | ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | செம்பாக்கம் நகராட்சியின் அலுவலக பராமரிப்பில் உள்ள கணினி, பிரிண்டர்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 2.00 | ஆரஞ்ச் சிஸ்டம்ஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | கிரிஷ் கம்ப்யூட்டர்ஸ் | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 6 | வார்டு எண்.1 முதல் 7 வரையான வார்டு பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் பராமரிப்பு பணி | 5.00 | எஸ்விபி எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ராஜலட்சுமி கான்ட்ராக்ட்ஸ் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 7 | வார்டு எண்.8 முதல் 15 வரையான வார்டு பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் பராமரிப்பு பணி | 5.00 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ஜெ. தெய்வகனி | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 8 | நகராட்சி பகுதிகளில் 16 இடங்களில் மற்றும் அம்மா உணவகத்தில் உள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோக செய்யும் இயந்திரங்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 9.80 | போர்டிஸ் கார்பரேசன் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | என். சாஸ்தாமணி | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 9 | நகராட்சி பகுதியில் 130 இடங்களில் உள்ள சிறுமின்விசை மோட்டர்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 9.80 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | ஜெ. தெய்வகனி | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 10 | 16 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் குடிநீர் விநியோகம் செய்ய பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | 9.80 | போர்டிஸ் கார்பரேசன் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | என். சாஸ்தாமணி | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 11 | அலுவலக பராமரிப்பில் உள்ள நகலெடுக்கும் இயந்திரம் மற்றும் வண்ண நகலெடுக்கும் இயந்திரம் ஆண்டு பராமரிப்பு பணி மற்றும் தேவையான டோனர்கள் கொள்முதல் செய்தல் | 2.50 | யுனிகாம் இன்போ பி லிட் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ஸ்ரீ வாரி கம்பியூட்டர்ஸ் | மதிப்பீட்டை விட 1.80% அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வ.எண். 1, 2, 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 ஆகிய பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனங்களுக்கு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
2. வரிசை எண்.3 மற்றும் 4ல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாததால், மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.635** அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சியில் 2020–21ம் நிதியாண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக 20.3.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக பராமரிப்பில் உள்ள 125 கேவிஏ ஜெனெரேட்டர்கள் 2 எண்ணிக்கை மற்றும் எளம்எப் பேனல் போர்டு 2 எண்ணணம ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 4.00 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 2 | செம்பாக்கம் நகராட்சியில் அலுவலக பராமரிப்பில் உள்ள 10 கேவிஏ ஆன்லைன் யூபிஎஸ் மற்றும் 16 எண்ணிக்கை மிக கலன்கள் பராமரிப்பு பணி | 2.00 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |

அலுவலக குறிப்பு: பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.636** அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்.8**

செம்பாக்கம் நகராட்சியில் 2020–21ம் நிதியாண்டிற்கு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்காக 31.3.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான பேட்டரியால் இயங்கக்கூடிய வாகனம் (Battery Operated Vehicle) 5 எண்ணிக்கைகள் சப்ளை செய்தல் பணி | 9.00 | ஸ்ரீ சுவாமி எலக்ட்ரானிக்ஸ் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | எஸ்பிஏ இன்போடெக் சர்வீசஸ் | மதிப்பீட்டை விட 2.20% அதிகம் |

அலுவலக குறிப்பு: பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.637 அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு பணிகளை துரிதப்படுத்தும் விதமாக நகராட்சி துப்புரவு பிரிவு வாகன ஓட்டுநர்கள், ஆணையர், பொறியாளர், சுகாதார ஆய்வாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், வருவாய் பிரிவு என அனைத்து நகராட்சி பணிகளும் துரிதப்படுத்தும் விதமாகவும், பணிகளை உடனுக்குடன் தகவல் பரிமாற்றம் செய்து முடித்திட ஏதுவாக 17 எண்ணம் வயர்லஸ் கருவிகள் பயன்பாட்டில் உள்ளது.

இக்கருவிகளுக்கான அலைவரிசை உரிமக் காலம் 28.2.2019ம் தேதியுடன் முடிவடைந்து இக்கருவிகள் தயாரிப்பு நிறுவனத்தின் நேரடி டீலரான ஆர்யா ஆம்னி வாக்கி டாக்கி நிறுவனம், மூலமாக 2019–20 ம் ஆண்டிற்கு அலைவரிசை புதுப்பித்தல் பணியினை மேற்கொள்ளவும், இதற்கான உத்திரவு ஏற்கனவே இவ்வலுவலக செயல்முறை ஆணை நாள் 28.2.2019ன் படி வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் இதற்கான செலவினத் தொகை ரூ.126072/– ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்படாமல் நிலுவையாக உள்ளது. எனவே, தற்போது மேற்படி தொகை வழங்க கோரி மீண்டும் 20.04.2020 ம் தேதி கோரப்பட்டுள்ளதால் இத்தொகையை வழங்க அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 2019–20ம் ஆண்டிற்கான புதுப்பித்தல் கட்டணம் ஏற்கனவே வழங்கப்படாமல் நிலைவையாக உள்ளதை தற்போது வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.638 அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

செம்பாக்கம் நகராட்சி பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு தற்போது தமிழக அரசு ஒவ்வொரு நாளும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு "**கொரோனா வைரஸ்**" தடுப்பு சம்பந்தமாக நாள்தோறும் அறிவிப்புகள் வெளிவந்த வண்ணம் உள்ளது. மேலும், அரசு செயலாளர், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை கடிதம் ந.க.எண்.01/சிஎஸ்/2020 நாள் 15.3.2020 மற்றும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.5437/ஜெ1/2020 நாள் 15.3.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி தடுப்பு நடவடிக்கை சம்பந்தமாக தனியாக நகராட்சி பணியாளர்கள் 10 நபர்களை ஈடுபடுத்தி அவர்களை கொண்டு நகராட்சி பகுதியில் மக்கள் அதிகம் கூடும் இடங்கள், பேருந்து நிறுத்தங்கள், கோவில்கள், மசூதிகள், சர்ச்கள், அரசு அலுவலகங்கள், சமுதாய கூடங்கள், சமுதாய பொது கழிப்பிடங்கள், அங்கன்வாடி கட்டிடங்கள், நியாய விலை அங்காடி கட்டிடங்கள், வங்கிகள், வங்கி ஏடிஎம்கள், மக்கள் அதிகம் கூடும் சாலைகள், மின் துறை அலுவலகங்கள், அஞ்சல்

அலுவலகங்கள், பூங்காக்கள் போன்ற இடங்களில் மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை கிருமி நாசினிகள் தெளித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதன் பேரில் உரிய பாதுகாப்பு கவசங்களுடன் வேண்டிய மருந்துகள், கிருமி நாசினிகள் பொது மக்கள் கையை சுத்தப்படுத்தப் பயன்படுத்தும் Hand Sanitizer ஆகியன கீழ்காணும் விவரப்படி வாங்கி பயன்படுத்தவும்,

| Sl. No | Particulars |
|---|---|
| 1 | 12 ltr Sprayer |
| 2 | 50% Lysol |
| 3 | Hand Sanitizer |
| 4 | Safety Equipments |
| 5 | Flex Banners |
| 6 | Awarness Notices |
| 7 | Soap |
| 8 | Face Mask |
| 9 | Gloves |
| 10 | Bleaching Powder |

மேலும், கூடுதலாக பிரதான சாலைகள், பேருந்துகளிலும், ஆட்டோ ஸ்டாண்டுகளிலும், கிருமி நீக்கம் செய்ய தனியாக டாடா ஏஸ் வாகனம் இரண்டு வெளிக்கெணர்வு பணியாளர்கள் மற்றும் பவர் ஸ்பிரேயர் உடன் மருந்து தெளிக்க வாடகை மூலம் ஏற்படுத்திக் கொண்டு அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15 ன் கீழ் நகராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரி வாங்கப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.10.53 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.639** **அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

செம்பாக்கம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். இந்நகரின் 2011ம் ஆண்டின் மக்கட்தொகையின் படி 45356 ஆகும். தமிழக அரசின் உத்தரவின் படி நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் அம்மா உணவகம் மூலம் இந்நகரில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு மிக குறைந்த விலையில் காலை டிபன், மதியம் சாப்பாடு வழங்கப்பட்டு வருகிறது. சமையல் பணிக்காக இந்நகராட்சி சுய உதவி குழு உறுப்பினர்கள் 12 நபர்களை தேர்வு செய்து நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.250/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கொரேனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக 24.3.2020 ந் தேதி மாலை 6.00 மணி முதல்

14.4.2020 ந் தேதி வரை குற்றவியல் நடைமுறை சட்ட பிரிவு 144 ன் கீழ் ஊரங்கு தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு ள்ளதை தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் ஆய்வு கூட்ட அறிவுரைகள் நாள் 24.3.2020 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் கடித ந.க.எண். 516/2020/அ3 நாள் 25.3.2020 ம் தேதியில் அம்மா உணவகத்தில் காலை, மதியம் மற்றும் இரவு உணவு சமைத்து வழங்க கோரி கடிதம் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து தங்கு தடையில்லாமல் உணவு சமைத்து வழங்க போதிய பணியாளர்கள் இல்லாததால் ஏற்கனவே பணிபுரியும் பணியாட்கள் 12 நபர்கள் காலை, மதியம் உணவு சமைத்து வழங்கப்பட்டு வருகிறது. இரவு உணவு சமைக்க பணியாட்கள் இல்லாததால் அவசரம் அவசியம் கருதி, பொதுமக்கள் மற்றும் ஏழை எளிய மக்களின் நலன் கருதியும் மற்றும் ஆணையர் அவர்களின் அறிவுறையின்படி சமுதாய சமையலறை (Community Kitchen) அமைத்து சமையல் செய்வதற்காக இந்நகராட்சி பகுதியில் உள்ள சுயஉதவி குழுக்கள் மூலம் நாள்தோறும் இரவு உணவு சமைப்பதற்கு 6 நபர்களை பணியில் ஈடுபடுத்தி 1.4.2020 ந் தேதி முதல் இரவு உணவு சமைத்து வழங்கவும் இதற்கான ஊதியத்தினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் வரை கூடுதல் பணியாட்களை ஈடுப்படுத்தி பணி செய்யவும் இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.640** **அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

செம்பாக்கம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு பணிகளை துரிதப்படுத்தும் விதமாக நகராட்சி துப்புரவு பிரிவு வாகன ஓட்டுநர்கள், ஆணையர், பொறியாளர், சுகாதார ஆய்வாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், வருவாய் பிரிவு என அனைத்து நகராட்சி பணிகளும் துரிதப்படுத்தும் விதமாகவும், பணிகளை உடனுக்குடன் தகவல் பரிமாற்றம் செய்து முடித்திட ஏதுவாக 17 எண்ணம் வயர்லஸ் கருவிகள் பயன்பாட்டில் உள்ளது.

இக்கருவிகளுக்கான அலைவரிசை உரிமக் காலம் 29.2.2020ம் தேதியுடன் முடிவடைகிறது. அலைவரிசை உரிமக் காலம் மேலும் ஓர் ஆண்டிற்கு 2020–21 (ஒரு கருவிக்கு ஒரு மாதத்திற்கு ரூ.618/– வீதம் 1.3.2020 முதல் 29.2.2021 வரை) செலுத்த வேண்டியுள்ளது. இக்கருவிகள் தயாரிப்பு நிறுவனத்தின் நேரடி டீலரான ஆர்யா ஆம்னி வாக்கி டாக்கி நிறுவனம், எண்.40, 3வது தளம், யூனிபன்ச் பிரைட் கட்டிடம், 2வது மெயின் ரோடு, அம்பத்துார் தொழிற்பேட்டை, சென்னை – 600058 நிறுவனம் மூலமாக 2020–21 ம் ஆண்டிற்கு அலைவரிசை புதுப்பித்தல் பணியினை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | எண்ணிக்கை | ஆண்டு புதுப்பித்தல் கட்டணம் |
|---|---|---|
| 1 | 17 | ரூ.126072/- |

| | | |
|---|---|---|
| | | (வரிகள் உட்பட) |

அலுவலக குறிப்பு: 1. அலைவரிசை புதுப்பித்தல் கட்டணத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று புதுப்பித்தல் உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அங்கீகாரம் வழங்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை 2020–21ம் நிதியாண்டில் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்.641 அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி